# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

வெளியீடு எண்.1/2016 நாள் 25.09.2016

தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் மாதம் 17 மற்றும் 19 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக நடைபெறும். இதற்கான தேர்தல் அறிவிக்கை நாளை 26.09.2016 அன்று வெளியிடப்படும். வேட்பு மனு தாக்கல் நாளை முதல் துவங்கும்.

### தேர்தல் அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிக்கை பிரசுரித்தல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுதல் | 26.09.2016 |
| 2. | வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 03.10.2016 |
| 3. | வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 04.10.2016 |
| 4. | வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல் | 06.10.2016 |
| 5. | வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | |
| | முதல் கட்ட வாக்குப்பதிவு | 17.10.2016 |
| | இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு | 19.10.2016 |
| 6. | வாக்கு எண்ணுகை தொடங்கும் நாள் | 21.10.2016 |
| 7. | தேர்தல்கள் முடிக்கப்பட வேண்டிய நாள் | 24.10.2016 |
| 8. | தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நாள் | 26.10.2016 |
| 9. | மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் பேரூராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்/துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலுக்கான கூட்ட நாள் | 02.11.2016 |

<u>வேட்பு மனு தாக்கல் மற்றும் பரிசீலனை</u>

நாள்தோறும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி முடிய வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்.

வேட்பு மனுக்கள் ஆய்வு செய்ய நிர்ணயிக்கப்பட்ட நாளில் காலை 10.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறும் நாளன்று பி.ப. 3.00 மணியுடன் திரும்பப் பெறுதல் முடிவுபெறும்.

வாக்குப்பதிவு தேர்தல் நாளன்று காலை 07.00 மணிக்கு துவங்கி மாலை 05.00 மணியுடன் முடிவடையும்.

வாக்கு எண்ணுகை நாளன்று எண்ணுகைப் பணி காலை 8.30 மணி முதல் துவங்கும்.

## நேர்முக தேர்தல் நடைபெறவிருக்கும் பதவியிடங்கள்

மொத்தம் 1,18,974 ஊரக உள்ளாட்சி மற்றும் 12,820 நகர்ப்புற உள்ளாட்சி பதவியிடங்கள் ஆக மொத்தம் 1,31,794 பதவியிடங்கள் இத்தேர்தலின் மூலம் நிரப்பப்படும்.

31 மாவட்ட ஊராட்சிகளுக்களான 655 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள்.

388 ஊராட்சி ஒன்றியங்களுக்களான 6,471 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்கள்.

12,524 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்கள் மற்றும் 99,324 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள்.

12 மாநகராட்சிகளுக்கான 919 மாநகராட்சி மன்ற உறுப்பினர் பதவியிடங்கள்.

124 நகராட்சிகளுக்கான 3,613 நகராட்சி மன்ற உறுப்பினர் பதவியிடங்கள்.

528 பேரூராட்சிகளுக்கான 8,288 பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள்.

## கட்சி அடிப்படையிலும், கட்சி அடிப்படை அல்லாமலும் நடைபெறும் தேர்தல்கள்

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் மாநகராட்சி மன்ற உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு கட்சி அடிப்படையிலும், ஊரக உள்ளாட்சிகளில் கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் அல்லாமலும், தேர்தல்கள் நடைபெறும்.

## முதல் கட்ட தேர்தல்

நகர்ப்புறங்களில் 10 மாநகராட்சிகளுக்கும், 64 நகராட்சிகளுக்கும், 255 பேரூராட்சிகளுக்கும், ஊரகப் பகுதிகளில் 193 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 332 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கும், 3,250 ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கும், 50,640 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கும் 6,444 கிராம ஊராட்சி தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கு முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும்.

## இரண்டாம் கட்ட தேர்தல்

நகர்ப்புறங்களில் 2 மாநகராட்சிகளுக்கும், 60 நகராட்சிகளுக்கும், 273 பேரூராட்சிகளுக்கும், ஊரகப் பகுதிகளில் 195 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 323 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கும், 3,221 ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கும், 48,684 கிராம ஊராட்சி வார்டுகளுக்கும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கும் 6,080 கிராம ஊராட்சி தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கு இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும். திண்டுக்கல் மற்றும் சென்னை மாநகராட்சிகள் இரண்டாம் கட்ட தேர்தலில் இடம்பெறும்.

## வாக்குகள்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கான 4 தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால், 4 விதமான வாக்குச்சீட்டுகள் பயன்படுத்தப்படும். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு வெள்ளை நிறத்திலும், கிராம ஊராட்சித் தலைவர் தேர்தலுக்கு இளஞ்சிவப்பு நிறத்திலும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு பச்சை நிறத்திலும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு மஞ்சள் நிறத்திலும் வாக்குச்சீட்டுகள் பயன்படுத்தப்படும். இரண்டு கிராம ஊராட்சி வார்டுகளுக்கு பொதுவாக அமைக்கப்படும் வாக்குச்சாவடிகளில் ஒரு வார்டிற்கு வெள்ளை நிறத்திலும், மற்றொரு வார்டிற்கு இளநீல நிறத்திலும் வாக்குச்சீட்டுகள் பயன்படுத்தப்படும்.

## வாக்குச்சாவடிகள்

நடைபெறவுள்ள தேர்தலில், வாக்குப்பதிவு 91,098 வாக்குச்சாவடிகளில் நடைபெறும். இதில் 62,337 வாக்குச்சாவடிகள் ஊரக பகுதியிலும், 28,761 வாக்குச்சாவடிகள் நகர்ப்புறங்களிலும் அமைக்கப்படவுள்ளன. சென்னை மாநகராட்சியில் மட்டும் 5,531 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## வாக்காளர்கள்

சட்டமன்ற தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலின் அடிப்படை விவரங்களை (DATA BASE) இந்திய தேர்தல் ஆணையத்திடம் பெற்று, உள்ளாட்சி தேர்தலுக்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், தேசிய தகவல் தொடர்பு மையத்துடன் இணைந்து ONLINE முறையில் உள்ளாட்சி தேர்தலுக்கான புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்துள்ளது.

மொத்தம் 5.80 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இவர்களில் 2.88 கோடி ஆண் வாக்காளர்கள், 2.92 கோடி பெண் வாக்காளர்கள். இதர வாக்காளர்கள் 4,584.

ஊரக பகுதிகளில் மொத்தம் 3.19 கோடி வாக்காளர்கள். இதில், 1.59 கோடி ஆண் வாக்காளர்கள், 1.60 கோடி பெண் வாக்காளர்கள், 1,629 இதர வாக்காளர்கள்.

நகர்ப்புறங்களில் மொத்தம் 2.61 கோடி வாக்காளர்கள். இதில், 1.29 கோடி ஆண் வாக்காளர்கள், 1.32 கோடி பெண் வாக்காளர்கள், 2,955 இதர வாக்காளர்கள்.

## தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் விவரம்

நகர்ப்புற உள்ளாட்சிகளில் 664 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 1,836 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊரக உள்ளாட்சிகளில் 907 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 16,979 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர்ப்புறங்களில் ஒரு வாக்குச்சாவடிக்கு 4 அலுவலர்கள் வீதமும், கிராமப்புறங்களில் ஒரு வாக்குச்சாவடிக்கு 7 அல்லது 8 அலுவலர்கள் வீதமும் சுமார் 6.50 இலட்சம் அலுவலர்கள் வாக்குப்பதிவு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

பதட்டமான வாக்குச்சாவடிகளில் மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அலுவலர்களை நுண் பார்வையாளர்களாக நியமிக்க மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## வாக்குப்பெட்டிகள்/மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்

நடைபெறவுள்ள தேர்தலில் வாக்குப்பதிவிற்கு ஊரக பகுதிகளில் 2,17,500 வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவிற்கு 34,515 மின்னணு கட்டுப்பாட்டு இயந்திரங்களும் 41,418 மின்னணு வாக்குப்பதிவு கருவிகளும் மொத்தம் 75,933 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

முதன்முறையாக, ஊரக உள்ளாட்சிகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு புதிய முயற்சிகள் திட்டத்தின்கீழ் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளன.

## தேர்தல் பார்வையாளர்கள்

ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (IAS) வீதமும், சென்னை மாநகராட்சி மற்றும் சில மாநகராட்சி பகுதிகளுக்கு இரு தேர்தல் பார்வையாளர்களும் ஆக மொத்தம் தேர்தல் பணிகளை மேற்பார்வையிட 37 தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

## தேர்தல் வைப்புத் தொகை (DEPOSITS)

தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்பவர்கள் பின்வருமாறு வைப்புத்தொகை செலுத்த வேண்டும்.

| | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ. | இதர பிரிவினர் ரூ. |
|---|---|---|
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 100 | 200 |
| கிராம ஊராட்சி தலைவர் தேர்தல் | 300 | 600 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | 300 | 600 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 500 | 1000 |
| பேரூராட்சி / மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 250 | 500 |
| நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தல் | 500 | 1000 |
| மாநகராட்சி வார்டு உறுப்பினர் | 1000 | 2000 |

## தேர்தல் செலவு கணக்கு

வேட்பாளர்கள் தேர்தலுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் உரிய அலுவலரிடம் தங்கள் தேர்தல் செலவு கணக்குகளை ஒப்படைத்திட வேண்டும். ஒப்படைக்க தவறுபவர்கள் மீது மாநில தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளாட்சி தேர்தலில் மூன்றாண்டுகள் போட்டியிட இயலாதவாறு தகுதி நீக்கம் செய்யப்படுவர். வேட்பாளர்களுக்கான அதிகபட்ச தேர்தல் செலவுகள் வரம்பு பின்வருமாறு

| வ.எண். | பதவியிடம் | ரூ. |
|---|---|---|
| 1. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | 9,000/- |
| 2. | கிராம ஊராட்சி தலைவர் | 34,000/- |
| 3. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 85,000/- |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 1,70,000/- |
| 5. | பேரூராட்சி/மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் | 17,000/- |
| 6. | நகராட்சி மன்ற உறுப்பினர் (முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை) | 34,000/- |
| 7. | நகராட்சி மன்ற உறுப்பினர் (தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை) | 85,000/- |
| 8. | மாநகராட்சி மன்ற உறுப்பினர் (சென்னை நீங்கலாக) | 85,000/- |
| 9. | சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் | 90,000/- |

2011 சாதாரண தேர்தல்களில் தேர்தல் செலவு கணக்கினை தாக்கல் செய்யாமையால் நகர்ப்புற உள்ளாட்சிகளில் 4,784 நபர்களும், ஊரக உள்ளாட்சிகளில் 6,856 நபர்களும் ஆக மொத்தம் 11,640 நபர்கள் மூன்றாண்டுகளுக்கு தேர்தலில் நிற்க தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மேற்படி தகுதி நீக்க ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் முடிவுறாதவர்கள் இந்த தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர்களாவர்.

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

மக்கள் சுதந்திரமாக அச்சமின்றி வாக்களிக்க ஏதுவாகவும், வாக்குச்சாவடிக்கு வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதட்டம் நிறைந்த வாக்குச்சாவடிகள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/காவல் கண்காணிப்பாளர்களால் கண்டறியப்பட்டு அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிக்கப்படுவதோடு, வாக்குப்பதிவு நடவடிக்கைகளை வீடியோகிரா∴பி மூலம் பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மறைமுக தேர்தல்கள்

சாதாரண நேரடி தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு பின்வரும் பதவியிடங்களுக்கு மறைமுக தேர்தல்கள் நடத்தப்படும்.

**ஊரக உள்ளாட்சி அமைப்புகள்**

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சி தலைவர் பதவியிடங்கள் | 31 |
| மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்கள் | 31 |
| ஊராட்சி ஒன்றிய தலைவர் பதவியிடங்கள் | 388 |
| ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் பதவியிடங்கள் | 388 |
| கிராம ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்கள் | 12,524 |
| **ஊரக உள்ளாட்சியில் மறைமுக தேர்தல் நடைபெறும் மொத்த பதவியிடங்கள்** | 13,362 |

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்**

| | |
|---|---|
| மாநகராட்சி மேயர் பதவியிடங்கள் | 12 |
| மாநகராட்சி துணை மேயர் பதவியிடங்கள் | 12 |
| நகராட்சி மன்ற தலைவர் பதவியிடங்கள் | 124 |
| நகராட்சி மன்ற துணைத்தலைவர் பதவியிடங்கள் | 124 |
| பேரூராட்சி மன்ற தலைவர் பதவியிடங்கள் | 528 |
| பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் பதவியிடங்கள் | 528 |
| **நகர்ப்புற உள்ளாட்சியில் மறைமுக தேர்தல் நடைபெறும் மொத்த பதவியிடங்கள்** | 1,328 |

**மாதிரி நன்னடத்தை விதிகள்**

மாதிரி நன்னடத்தை விதிகள் உடனடியாக அமுலுக்கு வருகின்றன. அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், அவர்களது ஆதரவாளர்களும் மாதிரி நன்னடத்தை விதிகளைக் கடைப்பிடித்து, தேர்தல்கள் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற எல்லா விதத்திலும் மாநில தேர்தல் ஆணையத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

25.09.16

**மக்கள் தொடர்பு அலுவலர்**